தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப. (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.133/மா/2024

நாள் 31.01.2025

திரு. K.சங்கரவெங்கடேசன்,
சென்னை–600 044 ............... முறையீட்டு மனுதாரர்.

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம். ................ எதிர் மனுதாரர்.

சென்னை, குரோம்பேட்டை, மண்டலம் 3, வார்டு எண்.23, அருள் முருகன் ராமமூர்த்தி நகர், 2வது குறுக்கு தெரு, எண்.3 ல் வசிக்கும் திரு. K.சங்கரவெங்கடேசன், என்பவரின் 09.09.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.09.2024 அன்று பெறப்பட்டு 133/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, குரோம்பேட்டை, மண்டலம் 3, வார்டு எண்.23, அருள் முருகன் ராமமூர்த்தி நகர், 2வது குறுக்கு தெரு, எண்.3 ல் வசிக்கும் திரு. K.சங்கரவெங்கடேசன், என்பவர் தனது 09.09.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“அருள் முருகன் ராமமூர்த்தி நகர் மற்றும் செந்தில் நகர் சேரன் தெருவில் அமைந்துள்ள பாதாள சாக்கடையை உடனடியாக சரி செய்திட வேண்டும். இங்கு பாதாள சாக்கடை சரியாக அமைக்கப்படாத காரணத்தினால் இங்குள்ள தெருக்களில் சேம்பர் மூடியின் வழியாக கழிவு நீர் வெளியேறி வருகின்றது. கழிவு நீர் தேங்குதல் மட்டுமல்லாமல் மழைக்காலங்களில் வீடுகளுக்குள் கழிவு நீர் புகுகின்றது. சரியான அமைப்பு இல்லாததால் இப்பிரச்சனைகள் தொடர்கிறது. மேலும் AVM Water Plantக்கு வரும் வாகனங்களால் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் மட்டுமில்லாமல் சாலையும் விரைவில் பாதிப்பு அடைகின்றது.

எங்களது தெரு வழியாக பல்லாவரம் பெரிய ஏரி மற்றும் பொத்தேரி நீர்வாய்க்கால் பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரிக்கு செல்கின்றது. மேலும் கழிவு நீரால் துர்நாற்றம் மற்றும் சுகாதாரக்கேடு ஏற்படுகின்றது. எனவே இந்த பாதாள சாக்கடையை உரிய முறையில் சரி செய்திட தகுந்த நடவடிக்கை எடுக்க தாம்பரம் மாநகராட்சிக்கு பல தடவை மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு இந்த பிரச்சனைக்கு உரிய முறையில் தீர்வு காணும் பொருட்டு இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனு மீது தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் 13.09.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. உதவி ஆணையர், மண்டலம் 3, தாம்பரம் மாநகராட்சி அவர்கள் தனது 23.12.2024 நாளிட்ட அறிக்கையில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–க்கு உட்பட்ட வார்டு எண்.23ல் அமைந்துள்ள அருள் முருகன் ராமமூர்த்தி நகர் தெருக்களில் பாதாள சாக்கடை மற்றும் பழுதடைந்த சாலைகளை சரி செய்து தர விண்ணப்பித்த மனுவை ஏற்று மாநகராட்சி பொறியாளர்களுடன் கள ஆய்வு செய்து பொதுமக்களிடம் கலந்து ஆலோசித்து மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் தொடர்பாக கீழ்க்கண்டவாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்:

i) பாதாள சாக்கடை திட்டம் (UGSS) 2011 அப்போது உள்ள மக்கள் தொகை அடிப்படையில் உந்து நீர் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது வீடுகளின் எண்ணிக்கையும் மக்கள் தொகை எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளதால் Collecton Well சுமார் 5000 குடியிருப்புகள் உள்ளன. அதனால் கூடுதல் கழிவு நீர் வருவதால் Collecton Well புதியதாக அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

ii) இப்பகுதியில் உள்ள சாலைகள் தார் சாலைகளாக உள்ளது, ஒரு சில பகுதிகள் மட்டும் பழுதடைந்துள்ளது. அதை சரி செய்ய தொகை ரூ 9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

iii) இப்பகுதி ஏற்கனவே தாழ்வான பகுதியாக அமைந்துள்ளது. மழைநீர் வடிகால்வாய் இறுதியாக சேரும் இடம் (Disposal) சரியாக உள்ள பகுதிகளுக்கு ஏற்கனவே மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகள் பூமியின் அமைப்பின்படி தாழ்வாக உள்ளது. அப்பகுதியில் சுற்றுசுவர் எழுப்பப்பட்டு மழைநீர் செல்லாதவாறு தடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அப்பகுதி மக்கள் சுற்றுசுவரில் துளை ஏற்படுத்துவதால் மழைக்காலங்களில் மழைநீர் அவ்வழியாக செல்கிறது. அப்பகுதி மக்களிடம் இன்று கலந்து ஆலோசிக்கப்பட்டு ஏற்கனவே உள்ள மழைநீர் கால்வாய் மட்டும் தூர் வாரும் பணியினை மேற்கொண்டால் போதுமானது மற்றும் Sill Concrete பழுதடைந்துள்ளதை சரி செய்து தர தெரிவித்துள்ளனர்.

iv) இதில் குறிப்பிட்டுள்ள ஏரி WRD துறைக்கு சொந்தமானது.”என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. 03.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

1) அருள் முருகன் ராமமூர்த்தி நகர் மற்றும் செந்தில் நகர் சேரன் தெரு ஆகிய இடங்களில் பாதாள சாக்கடை சரியாக இல்லாததால் தொடர்ந்து கழிவு நீர் தேங்குதல் மட்டுமல்லாமல் மழைக்காலங்களில் வீடுகளுக்குள் கழிவு நீர் புகுவதை சரி செய்திட வேண்டும்.

2) அருள் முருகன் ராமமூர்த்தி நகர் 2வது தெருவிற்கும் வரதப்பிள்ளை தெருவுக்கும் இடையில் செயல்படும் A V M தண்ணீர் சுத்திகரிப்பு ஆலையால் நிலத்தடி நீர் ஆதாரம் பாதிக்கப்படுகிறது. அங்கு வந்து செல்லும் வாகனங்களால் சாலை பழுதடைகின்றது. இதனால் நகர மக்கள் பாதிப்பு அடைகின்றனர்.

3) பொத்தேரி கால்வாய் செல்லும் பகுதியில் Prestige கட்டுமான நிறுவனத்தால் அனைத்து தெருக்களையும் மறித்து நீண்ட மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளதால், மழைநீர் சரியாக செல்ல முடியாமல் குடியிருப்புகளில் வெள்ளம் உள்நுழைகிறது.

4) 2011 முதல் அருள் முருகன் ராமமூர்த்தி நகர் 1, 2 தெருக்கள் சேரன் மற்றும் பாண்டியன் தெருக்களில் கழிவு நீர் UGD Manhole வழியாக பொங்கி வெளியேறி ஆறாக ஓடுகிறது. இதனால் சுகாதார பிரச்சனைகளை எதிர் கொள்கிறோம்.

5) நகரில் உள்ள அனைத்து தெருக்களிலும் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

6) சரியான மழைநீர் வடிகால்வாய் இல்லை. ஆகவே அதை அமைத்து தர வேண்டுகிறோம்.

இதனால் அங்கு வசிக்கும் மக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகுவதால் இதனை சரி செய்திட உரிய நடவடிக்கை எடுக்க தாம்பரம் மாநகராட்சிக்கு பல தடவை மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவே இவற்றை சரி செய்திட இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் 03.01.2025 நாளிட்ட எழுத்துப்பூர்வ வாக்குமூலம் மற்றும் PEN DRIVE ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் தனது 03.01.2025 நாளிட்ட எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அருள்முருகன் ராமமூர்த்தி நகர் பகுதியில் கீழ்க்கண்ட பிரச்சனைகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<u>1) மழைநீர் கால்வாய் பிரச்சனை</u>

நகர் முழுவதும் மழைநீர் வெளியேற வழியின்றி, சிறு மழைக்கே தண்ணீர் வெள்ளமாகி மக்கள் வெளியே செல்ல மிகுந்த சிரமம் அனுபவிக்கின்றனர். பொத்தேரி கால்வாய் செல்லும் பகுதியில் Prestige கட்டுமான நிறுவனம் மதில் சுவர் எழுப்பி உள்ளதால், மழைநீர் சரியாக செல்ல முடியாமல் எங்கள் நகர் குடியிருப்புகளில் வெள்ளம் உள் நுழைகிறது. முறையான மழைநீர் வடிகால் அமைப்பு தேவை.

<u>2) ஏவிளம் நீர் ஆலை காரணமாக ஏற்படும் சிரமங்கள்</u>

அருள்முருகன் ராமமூர்த்தி நகர் 2–வது தெருவிற்கும் வரதபிள்ளை தெருவுக்கும் இடையில் ஏவிளம் ஆலை காரணமாக பல பிரச்சனைகள் உள்ளன. 2019 முதல் நகர மக்கள் பலமுறை தாம்பரம் கோட்டாட்சியர் மற்றும் பல்லாவரம் வட்டாட்சியருக்கும் முந்தைய பல்லாவரம் நகராட்சி மற்றும் தற்போதைய தாம்பரம் மாநகராட்சி ஆணையாளருக்கும் புகார் அளித்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

காலை 5.30 முதல் இரவு 11 மணி வரை தண்ணீர் எடுக்க வரும் லாரிகள் மற்றும் ஆட்டோக்கள் எங்கள் நகரின் 16 அடி சாலையில் வேகமாக வந்து செல்கின்றன. இதனால் பெரியவர்களும் குழந்தைகளும் அச்சத்துடன் வெளியே செல்வதற்கே அஞ்சுகின்றனர். அதிக எடையுடைய வாகனங்கள் அடிக்கடி வந்து செல்வதால் சாலைகள் சேதம் அடைந்துள்ளன.ஆழ்துளை கிணற்றில் இருந்து தண்ணீர் உறிஞ்சி எங்களின் நீர் ஆதாரத்தை அழித்து வருகிறது.

வாகன ஓட்டுனர்கள் மற்றும் அங்கு வேலை செய்யும் பணியாளர்கள் மது அருந்திய நிலையில் நிறுவனத்தின் உள்ளே இருந்து கொண்டு சத்தம் போட்டு கூச்சல் இடுவதால் அருகில் உள்ள வீடுகளில் இருப்பவர்கள் குறிப்பாக பெண்கள் மிகவும் அச்சமடைகின்றனர். குடியிருப்பு பகுதியில் இந்நிறுவனம் செயல் பட அனுமதிக்கக் கூடாது.

CMDA Master Plan–ன்படி நெமிலிச்சேரி கிராமம் எண்.159 சர்வே எண்.109–ல் உள்ள எங்கள் நகர் ஒரு முதன்மை குடியிருப்பு பகுதியாகும். தமிழக அரசு ஆணை எண்.1730, 24th July 1974 (Rural Development and Local Administration Department)-ன்படி முதன்மை குடியிருப்பு மண்டலத்தில் மண்டல ஒழுங்குமுறை பயன்பாட்டு அனுமதியின் கீழ் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் விற்பனை நிலையம் அமைய அனுமதி கிடையாது. மேலும் மாசு கட்டுப்பாடு சட்ட விதிகளின் கீழ் இந்த நிறுவனம் ஆரஞ்சு வகையை சார்ந்ததாகும். சட்ட விதிகள் இவ்வாறு இருக்கும்போது அரசுத் துறைகள் எதன் அடிப்படையில் இந்நிறுவனம் செயல்பட அனுமதி அளித்துள்ளார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே முறையாக ஆய்வு செய்து உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்.

3) (UGD)பாதாள சாக்கடை பிரச்சனை

2011 முதல் அருள் முருகன் ராமமூர்த்தி நகர் 1, 2 தெருக்கள் சேரன் மற்றும் பாண்டியன் தெருக்களில் கழிவு நீர் UGD Manhole வழியாக பொங்கி வெளியேறி ஆறாக ஓடுகிறது. இதனால் மக்கள் சுகாதார பிரச்சனைகளை எதிர் கொள்கிறோம். பிரச்சனை தீர்க்க UGD Manhole–ல் இருந்து கழிவு நீரை பம்ப் செய்து ரங்கநாதன் தெருவில் உள்ள வாய்க்காலில் விடுகின்றனர். இது புத்தேரி ஏரியில் கலந்து துர்நாற்றத்துடன் செல்கிறது. இதனால் அருகிலுள்ள குடியிருப்புகளின் Bore well கழிவு நீர் கலந்து பாதிப்பு ஏற்படுகிறது.

UGD அமைப்பை சீரமைத்து, கழிவுநீர் கலக்காமல் பாதுக்காக்க வேண்டும்.

4) முறையான சாலை வசதியின்மை

நகரின் அனைத்து தெருக்களிலும் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

பல்லாவரம் நகராட்சி தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்ந்த பின்னரும், புதிய LED விளக்குகள் மற்றும் Metro Water இணைப்புகள் தவிர்த்து, எந்த அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

மேலே குறிப்பிட்ட அனைத்து அடிப்படை தேவைகள் மற்றும் பிரச்சனைகளை உடனடியாக சரி செய்து நகர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

7. 3.1.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் இளநிலை பொறியாளர் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–க்கு உட்பட்ட வார்டு எண்.23–ல் அமைந்துள்ள அருள் முருகன் ராமமூர்த்தி நகர் தெருக்களில் பாதாள சாக்கடை மற்றும் பழுதடைந்த சாலைகளை சரி செய்து தர விண்ணப்பித்த மனுவை ஏற்று பொறியாளர்களுடன் கள ஆய்வு செய்து பொதுமக்களிடம் கலந்து ஆலோசித்து மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களுக்கு கீழ்க்கண்டவாறு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1) பாதாள சாக்கடை திட்டம் (UGSS) 2011 அப்போது உள்ள மக்கள் தொகை அடிப்படையில் உந்து நீர் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது வீடுகளின் எண்ணிக்கையும் மக்கள் தொகை எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளதால் Collection Well சுமார் 5000 குடியிருப்புகள் உள்ளன. அதனால் கூடுதல் கழிவு நீர் வருவதால் Collection Well புதியதாக அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

2) இப்பகுதியில் உள்ள A V M தண்ணீர் சுத்திகரிப்பு ஆலைக்கு பல்லாவரம் நகராட்சியாக இருந்தபோது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாநகராட்சியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் தற்போது உள்ள விதிமுறைகளின்படி அந்நிறுவனத்திற்கு அனுமதி அளிப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3) அப்பகுதியில் Prestige நிறுவனத்தால் அந்நிறுவனத்தின் இடத்தில் சுற்றுசுவர் எழுப்பப்பட்டு மழைநீர் செல்வது தடுக்கப்படுகிறது. மழைக்காலங்களில் இந்நிறுவனத்துடன் பேசி சுற்று சுவரில் ஒரு பகுதியை இடித்து விட்டு மழைநீர் செல்ல வழிவகை செய்யப்படுகிறது. எனினும் சுற்று சுவர் தாம்பரம் மாநகராட்சி இடத்தில் அமைந்துள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4) இப்பகுதியில் உள்ள சாலைகள் தார் சாலைகளாக உள்ளது ஒரு சில பகுதிகள் மட்டும் பழுதடைந்துள்ளது. அதை சரி செய்ய தொகை ரூ 9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

5) மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார்கள் குறித்து மனுதாரருடன் கலந்து பேசி அப்பகுதியினை ஆய்வு செய்து 3 மாத காலத்திற்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் அவரது எழுத்துபூர்வ வாக்குமூலம், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் மண்டலம் 3–ன் இளநிலைபொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.

மனுதாரர் அருள் முருகன் ராமமூர்த்தி நகர் மற்றும் செந்தில் நகர், சேரன் தெரு ஆகிய ,இடங்களில் அமைந்துள்ள பாதாள சாக்கடை சரியாக இல்லாததால் தொடர்ந்து கழிவு நீர் தேங்குவது மட்டுமல்லாமல் மழைக்காலங்களில் வீடுகளுக்குள் கழிவு நீர் புகுகின்றது. இங்கு செயல்படும் AVM தண்ணீர் சுத்திகரிப்பு நிறுவனத்தால் நிலத்தடி நீர் குறைவதுடன் வந்து செல்லும் வாகனங்களால் சாலை மிக மோசமாக பழுதடைகின்றது. இங்கு அமைந்துள்ள கட்டுமான நிறுவனம் அனைத்து தெருக்களையும் மறித்து நீண்ட மதில் சுவர் கட்டியுள்ளதால் மழைநீர் சரியாக செல்ல முடியாமல் குடியிருப்புகள் வெள்ளத்தால் பாதிப்பு அடைகின்றது. மழைநீர் வடிகால்வாய் இல்லை. UGD Manhole வழியாக கழிவுநீர் பொங்கி வெளியேறி சுகாதார பிரச்சனைகளை உருவாக்கின்றது என்று குறிப்பிட்டு இவற்றை சரி செய்திட கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள பாதாள சாக்கடை திட்டம் 2011–ல் அப்பொழுது உள்ள மக்கள் தொகை அடிப்படையில் உந்து நீர் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது சுமார் 5000 குடியிருப்புகள் உள்ளது என்றும் மக்கள் தொகை எண்ணிக்கையும் அதிகரித்த காரணத்தினால் கூடுதல் கழிவு நீருக்காக Collection Well புதியதாக அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள் அனுதிக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலும் AVM தண்ணீர் சுத்திகரிப்பு ஆலை பல்லாவரம் நகராட்சியாக இருந்த பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாநகராட்சியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் தற்போது உள்ள வழி முறைகளின்படி அந்நிறுவனத்திற்கு அனுமதி அளிப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மழைக்காலங்களில் Prestige நிறுவனத்துடன் பேசி சுற்று சுவரில் ஒரு பகுதியை இடித்துவிட்டு மழைநீர் செல்ல வழிவகை செய்யப்படுகிறது. எனினும் சுற்றுசுவர் தாம்பரம் மாநகராட்சி இடத்தில் அமைந்துள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் . பழுதடைந்துள்ள சாலையை சரி செய்ய ரூ 9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளதையும் மாநகராட்சியின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் கழிவு நீர் பொது சுகாதாரத்திற்கு உண்டாக்கும் கேடுகளை கருத்தில் கொண்டு மண்டலம் 3–ன் இளநிலை பொறியாளர் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் Collection Well புதியதாக அமைக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், AVM தண்ணீர் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு அனுமதி அளிப்பது தொடர்பாக விதிகளின்படி ஆய்வு செய்து விரைந்து முடிவெடுக்கவும், பழுதடைந்த தார் சாலைகளை விரைந்து சரி செய்யவும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையருக்கு அறிவுறுத்திட தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

பொதுமக்களின் அடிப்படை பிரச்சனைகளை அவ்வப்போது தகுந்த கால இடைவெளியில் அலுவலர்களை கொண்டு கள ஆய்வின் மூலம் அறிந்து அதனை உரிய முறையில் சரி செய்திட விரைந்து நடவடிக்கை எடுக்கவும் தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகின்றது.

2025–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்,

1) திரு. K.சங்கரவெங்கடேசன்,
எண்.3, அருள் முருகன் ராமமூர்த்தி நகர்,
2வது குறுக்கு தெரு, வார்டு எண்.23,
மண்டலம் 3, குரோம்பேட்டை,
சென்னை–600 044.

2) உதவி ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
மண்டலம் 3 அலுவலகம், கலைவாணி தெரு,
இராஜகீழ்பாக்கம், சென்னை–600 073.

3) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்.

4) நகரரட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).